सत्यमेव जयते

# இந்திய துணைத்தூதரகம்

**யாழ்ப்பாணம்**

## <u>ஊடக அறிக்கை</u>

## இலங்கைக்கான புதிய இந்தியத்தூதுவர் கொழும்பு வருகை.



இலங்கை சனனாயக சோசலிச குடியரசுக்கான புதிய இந்தியத்தூதுவர் திரு. யஷ்வர்தன் குமார் சின்ஹா அவர்கள் ஜூன் 18, 2013 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பை வந்தடைந்தார்.

திரு. Y.K.சின்ஹா அவர்கள் நன்கு பண்பட்ட இராஜதந்திரி ஆவார். அவர் தனது 32 வருட இராஜதந்திர வாழ்வில், புது டெல்லியிலுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சிலும் மத்திய கிழக்கு, ஐரோப்பா, தென்னமெரிக்கா ஆகிய இடங்களிலுள்ள இந்தியத் தூதரகங்களிலும் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா தலைமைச்செயலகத்துக்கான இந்தியாவின் நிரந்தரத் தூதரகத்திலும் பல்வேறு முக்கியமான பொறுப்புக்களை வகித்தார். இலங்கைக்கு வருவதன் முன்னர் புதுடெல்லியிலுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான்-ஈரான் பிரிவில் மேலதிகச் செயலாளராக கடமையாற்றினார்.

அவர் 2007 ஜனவரி முதல் 2009 ஓகஸ்ட் வரை வெனிசுவெலாவுக்கான தூதராகவும் ஓகஸ்ட் 2003 முதல் டிசம்பர் 2006 வரை துபாய்க்கான துணைத்தூதராகவும் பணியாற்றினார். முன்னதாக அபுதாபியிலுள்ள துணைத்தூதரகத்தின் துணைத் தலைவராகவும் மார்ச் 2002 முதல் ஜுலை 2003 வரை கடமையாற்றினார்.

அவர் 2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் சவுதி அரேபியா, இத்தாலி ஆகிய நாடுகளிலும் புதுடெல்லியிலுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சிலும் பல்வேறு பதவிகளில் பணியாற்றினார். 1990களின் நடுப்பகுதியில் பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரகத்திலும் நியூயோர்க்கிலுள்ள ஐ.நாவுக்கான நிரந்தர தூதுக்குழுவிலும் பணியாற்றியிருந்தார்.

திரு. Y.K.சின்ஹா அவர்கள் 1958 ஆம் ஆண்டு ஒக்டோபர் 4ஆம் திகதி பிறந்தார். டெல்கி பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் பட்டப்பின் படிப்பைப் பூர்த்தி செய்த பின் இந்திய வெளிநாட்டு சேவையில் 1981 இல் இணைந்தார். டெல்லியில் 1982 இல் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டுக்கான செயலகத்தினதும், 1983 இல் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுச் செயலகத்தினதும் உறுப்பினராகச் செயற்பட்டார். இவர் கெய்ரோவிலுள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் 1983 முதல் 1985 வரை அரபு மொழியைக் கற்றார்.

அவர் கிரிஜா அவர்களைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு அம்புஜ், வினாயக் என இரு புதல்வர்கள் உள்ளனர்.

**யாழ்ப்பாணம்**
**19 ஜுன் 2013**